மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்பற்றி கவனிக்கலாம்.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமக் கூட்டுறவு மூலமாக வழங்கப்படுகின்ற இந்தக் கடன் இப்பொழுது எவ்வளவு வழங்கப்படுகிறது ? ஏற்கெனவே வழங்கப்பட்ட கடனைவிட இப்பொழுது குறைவாக வழங்கப்படுகிறது என்று கருதுகிறேன். ஒரு நபருக்கு இப்பொழுது ரூபாய் 3,700 வழங்கப்படுகிறது என்று கருதுகிறேன். அந்தக் கடன் சாதாரணமாக, செங்கல் வாங்கக்கூட போதவில்லை. இனி வழங்கும், கடனை, ஏற்கெனவே கொடுத்தது மாதிரி ரூபாய் 5,000 அல்லது ரூபாய் 6,000 ஆக உயர்த்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவனந்தம் : தனிக் கேள்வி போடும்படி வேண்டிக் கொள்கிறேன்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமீயக் கூட்டுறவுகள் வீடுகள் கட்டும் திட்டத்தில் தவணைமுறையிலே கடன் வழங்குகின்ற காரணத்தால், அதிகமாகக் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, அந்தக் காலதாமதத்தைத் தவிர்க்கின்ற முறையில், அரசு விரைவாகத் தர நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அப்பேர்ப்பட்ட உத்தேசம் இப்பொழுது இல்லை.

புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய அணைகள் கட்டும் திட்டம்.

*வினா எண். 294—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள காட்டாறுகளில் மழை காலங்களில் ஏற்படும் வெள்ளத்தைத் தடுத்து அணை கட்டி பாசன வசதி செய்யும் உத்தேசமுண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள காட்டாறுகளின் குறுக்கே 15 இடங்களில் அணைகள் கட்டுவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அவை தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளன என்று சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

[1981 பிப்ரவரி 27

[முற்பகல் 10–10]

திரு. த. மாரிமுத்து : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆண்டுதோறும் தொடர்ந்து வறட்சியாக இருப்பதனால் இந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை விரைவாக செயல்படுத்த அரசு ஆவன செய்யும்.

திரு. பெ. திருமாறன் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தொகுதியில் உள்ள குலமங்கலம் வெள்ளான் ஆற்றில் ஒரு சிறு அணை கட்டுவதாக 10 ஆண்டு காலமாக எஸ்டிமேட் போட்டு திரும்பத் திரும்ப ரிவைஸ்டு எஸ்டிமேட் போடுகின்றார்கள். அதனால் இன்னும் அந்தத் திட்டம் அமலாகாமல் இருக்கின்றது. அதை அரசு கவனித்து இந்த ஆண்டாவது துரிதமாக நடவடிக்கை எடுத்து முடிக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, கேரளாவில் இருந்து மேற்கு நோக்கிப் பாயும் தண்ணீரை, வறட்சிப் பகுதியான இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களுக்குக் கிடைக்கும் வகையில் பேச்சுவார்த்தையை, நமது அமைச்சர் கேரள மாநில முதல் அமைச்சருடன் நடத்தினார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள காட்டாறுக்கும், கேரள மாநிலத்துக்கும் சம்பந்தம் இல்லை.

அம்மாப்பட்டியருகே பாலாற்றின் குறுக்கே அணை.

*வினா எண். 295—திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு நீர்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம், மணப்பாறை தாலுக்கா, துவரங்குறிச்சி பிர்கா, லக்காநாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த அம்மாபட்டியருகே வரும் பாலாற்றின் குறுக்கே விவசாய நீர்ப்பாசனத்திற்காக ஒரு அணை கட்டும் திட்டம் உண்டா ?

TRUTH ALONE TRIUMPHS